## பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் 2025ம் ஆண்டில் நடாத்தும் போட்டிகளுக்கான விதிமுறைகள்

1. பிரித்தானியாவில் வாழும் சைவ சமயத்தவர்கள் எவரும் பங்குபற்றலாம்

2. திருமுறை ஓதல் போட்டி, தமிழ் ஆங்கிலம் பேச்சுப் போட்டிகளுக்கான வயதுப் பிரிவு எல்லை.

   1) 5 வயதிற்கு உட்பட்டோர்.
   2) 5-7 வயது
   3) 7-10 வயது
   4) 10-13 வயது
   5) 13-16 வயது

3. ஒன்றியத்தினால் தரப்பட்ட பேச்சுக்கள் மட்டுமே போட்டியில் பயன்படுத்தப்பட வேண்டும்

(தேவார புராணம் ஒழுங்கு முறை, பேச்சுக்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது)

4. திருமுறை ஓதல் போட்டியில் பங்கு பற்றுபவர்கள் ஆலயத்தில் நின்று இறைவனை வழிபடுவது

போன்று பாட வேண்டும். (தரப்பட்ட வயதுக்கான ஒழுங்கு முறைப்படி திருமுறைகளை அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப தெரிவு செய்து பாடலாம். சுருதிப் பெட்டியையும் தாளத்தையும் பாவிக்கலாம்).

5. போட்டிகளுக்கான கட்டணம் இலவசம். (போட்டிகளுக்கான செலவுகள் ஒன்றியத்தினால்

வழங்கப்படமாட்டாது).

6. போட்டிகள் முதல் நிலை பிரதேச ரீதியில் பின்வரும் கோவில்களில் சனிக்கிழமை 17.05.2025 அல்லது ஞாயிற்றுக்கிழமை 18.05.2025 அன்று நடைபெறும்.

   1) வடக்கு மேற்கு இலண்டன் - *Ealing* கனக துர்க்கை அம்மன் ஆலயம் - *Mr. T. Joganathan*
   2) தென்மேற்கு இலண்டன் - *Wimbledon* ஸ்ரீ கணபதி ஆலயம் - *Mrs. Janani Myuran*
   3) வடகிழக்கு இலண்டன் - சைவ முன்னேற்றச் சங்கம் - *Mr. Indusekaran*
   4) தென் கிழக்கு இலண்டன் - *Lewisham* சிவன் கோவில - *Mrs. Sharmila Manoharan*

இலண்டனுக்கு வெளியில் வசிப்பவர்கள் மேற்குறிப்பிட்ட ஏதாவது கோவில்களில் பங்கு பற்ற முடியும்.

7. இறுதி நிலைப் போட்டி *Wimbledon* பிள்ளையார் கோவிலில் 24.05.2025சனிக்கிழமை அன்று நடைபெறும்.

8. ஒன்றியத்தின் வலைப்பக்கத்தில் நேரடியாக உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவு திகதி 30.04.2025.

9. ஒவ்வொரு நடுவர் குழுவிலும் மூன்று நடுவர்கள் அங்கம் வகிப்பார்கள். இவர்கள் பங்கு பற்றும்

பிள்ளைகளின் உறவினர்களாக இருக்கமாட்டார்கள்.

10. நடுவர்களின் தீர்ப்பே போட்டிகளின் இறுதி முடிவாகும்.

11. போட்டியில் முதலாவதாக வருபவர்கள் 21.06.2025, 22.06.2025 திகதிகளில் நடைபெறும் 24 வது சைவ மகாநாட்டு விழாவில் பங்குபற்றவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

### போட்டிகளுக்கான பிரிவுகளும் அவற்றுக்கான விபரங்களும்

| பிரிவு | வயது எல்லை | as at 01.04.2025 | திருமுறைகள் | தமிழ்ப் பேச்சு தலைப்புகள் | English speech Topics |
|---|---|---|---|---|---|
| 1 | 5 வயதிற்கு உட்பட்டோர் | 01.04.2020 ற்கு பின் | தேவாரம் | சைவ சமயம் | Saivaism |
| 2 | 5+ --- 7 வயது | 01.04.2018 தொடக்கம் 31.03.2020 வரை | தேவாரம் புராணம் | பட்டினத்தார் | Auvaiyar |
| 3 | 7+ ---10 வயது | 01.04.2015 தொடக்கம் 31.03.2018 வரை | தேவாரம் புராணம் வாழ்த்து | யோகர் சுவாமிகள் | Yogar Swamigal |
| 4 | 10+---13 வயது | 01.04.2012 தொடக்கம் 31.03.2015 வரை | பஞ்சபுராணம் வாழ்த்து | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | Sri la Sri Arumuganaavalar |
| 5 | *13+ ---16* வயது | 01.04.2009 தொடக்கம் 31.03.2012 வரை | பஞ்சபுராணம் திருப்புகழ் வாழ்த்து | சைவ மரபில் திருமுறைகளின் பின் எழுந்த பக்தி இலக்கியங்கள் | Saiva Devotional Literature that Emerged after the Thirumurais |